**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 390/2022 |
| Prosecution Witness | : | அ.சா.6 |
| Name | : | முருகேசன் |
| Father's/Husband Name: | : | அம்மமுத்து |
| Address : | : | 200, வடக்கு தெரு, செங்கமேடு கிராமம், தொளார் அஞ்சல், திட்டகுடி தாலுகா, கடலூர்.606 111 |
| Age | : | 57/2024 |

<u>தேதி: 22/01/2024</u>

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **( எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

நான் தற்போது திருச்சி மாவட்டம், கொல்லிடம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் மாவட்ட குற்ற பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரிலும், நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 2022 ஆண்டு நான் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, செல்வராணி க/பெ ஜெய்சங்கர் என்பவர் கொடுத்த புகாரினை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்கள் C.No. C1/4284/1506/2022 மற்றும் C.No. 211/ DCB /PBLR /2022 மூலம் அனுப்பியதை பெற்று நான் முதல் தகவல் அறிக்கையை காவல் நிலைய குற்ற எண்.7/2022 ல் இதச பிரிவுகள் 294(b),

506(1) & 3, 4 of TNPOCEI-ன் கீழ் 12/07/2022 அன்று வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3.** பின்பு இவ்வழக்கின் புகார்தாரர் செல்வராணி என்பவரை அன்றைய தினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் விசாரணையை எடுத்துக்கொண்டு, 13/07/2022 அன்று காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளஞ்செழியன் மற்றும் மணிவாசகம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4.** பின்பு இந்த வழக்கின் சாட்சிகள் துரைராஜ், சுதா, துரைசாமி மற்றும் ஜெய்சங்கர் ஆகியோரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து சம்பவம் உண்மையெனத் தெரியவந்ததால் எதிரியை 13/07/2022 அன்று காலை 11.00 மணிக்கு கைது செய்து 13.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சுதா மற்றும் துரைசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.5.** பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். பின்வு மேல்நடவடிக்கைக்கா காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அந்த கடை யாருடைய பெயரில் இருந்தது என எனது விசாரணையின்போது தெரிந்து கொண்டேனா என்றால் அது செல்வராணியின் பெயரில்தான் இருந்தது. அவருடைய பெயரில் தான் இருந்தது என்பதை காண்பிக்கும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் அவ்வாறான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில்

சம்பவம் நடைபெற்ற தேதியாக 05/06/2020 என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தேதியில் என்ன நடந்தது என்றால் பணத்தை முழுவதுமாக மனுதாரர் செலுத்திவிட்டு கடையையும், இருசக்கர வாகனத்தையும் திரும்ப கேட்டபோது, வட்டிக்கு வட்டி போட்டு 10 லட்சம் ரூபாய் செலுத்தினால்தான் தருவேன் என கூறியுள்ளார். அந்த தேதியிலிருந்து புகார் கொடுத்த நாள் வரை உண்டான இடைப்பட்ட காலத்தில் புகார்தாரர் வேறு புகார் ஏதும் கொடுத்தாரா என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் கடந்த 03/01/2022 அன்று குன்னம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண் 2/2022 ல் இதச. பிரிவுகள் 294(b), 506(1)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படடதாக தெரிந்து கொண்டேன். அந்த புகாரை யார் கொடுத்துள்ளார் என்றால் செல்வராணி என்பவர் கொடுத்துள்ளார். மீண்டும் சாட்சி அந்த புகார் ஜெய்சங்கர் என்பவரால் கண்ணன் மீது கொடுக்கப்பட்டுள்ளது என கூறுகிறார். இதை நான் எனது விசாரணையின்போது செல்வராணியின் மூலமாக தெரிந்து கொண்டேன்.

2). குன்னம் காவல் நிலையத்தில் குற்ற எண் 856/2021 எனதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. நான் மேலே குறிப்பிட்ட குற்ற எண் இந்த வழக்கின் எதிரி மனுதாரர் மீது கொடுக்கப்பட்ட புகாருக்கானது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. நான் விசாரணையின்போது, தெரிந்து கொண்டதாக கூறப்படும் இந்த விபரங்களை நான் பதிவு செய்த சாட்சிகளின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக என்றால் இல்லை. ஏனென்றால் அது ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியால் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே சம்பவத்திற்காக குன்னம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளபோது, நான் அந்த காவல் நிலையத்தின் அதிகாரிகளை

விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. என்னால் புகார் பெறப்பட்ட தேதி அன்றே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டேனா என்றால் ஆமாம். ஆனால் மாவட்ட காண்காணிப்பாளர் அனுப்பிய மேற்குறிப்பில் நெசசரி ஆக்ஷன் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் புகாரின் அடிப்படையில் சாட்சிகய் யாரையும் விசாரணை செய்யாமல் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 12/07/2022 அன்று மாலை 17.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரை எப்போது விசாரித்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டபோதே புகார்தாரர் உடன் இருந்தார். அவரை விசாரித்துவிட்டுதாக் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

3) புகாரை காவல் கண்காணிப்பாளரிடம் பொதுவாக காலை 10.00 மணிக்கு மேல்தான் ஒப்படைக்க முடியும் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எந்த தேதியில் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றதாக பார்வை மகஜரில் இல்லை என்றால் சரிதான். அந்த சாட்சிகளின் வாக்குமூலத்திலும் அந்த விபரங்கள் இடம்பெறவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்பு எதிரி பணத்தை பெற்றதாகவோ அல்லது எதிரி வட்டியை புகார்தாரருக்கு செலுத்தியதாகவோ காண்பிக்கும் எந்த ஆவணத்தையும் கைப்பற்றி இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிரி அது சம்பந்தமாக அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். நான் எதிரியை கைது செய்து யார் யாரையெல்லாம் அவருடன் அழைத்து வந்தேன் என்றால் எதிரி மட்டும்தான் கைது செய்து அழைத்து வந்தேன்.

நானாகவே ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை தயார் செய்து கொண்டு எதிரியை கைது செய்து சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வந்தேன் என்றால் சரி அல்ல..

4) எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணத்தை புகார்தார் எதிரிக்கு செலுத்தினேன் என அவர் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. நான் அதற்கான ஆவணங்களை புகார்தாரரிடம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஏனென்றால் புகாரை கொடுப்பதற்கு முன்பே கடைக்கான உடைமை எதிரியிடம் இருந்தது அவர் அனைத்து ஆவணங்களையும் எடுத்து வைத்து கொண்டார். புகார்தாரர் கூட இந்த விளக்கத்தை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றாலும் நானாகவே இந்த விளக்கத்தை வேண்டும் என்று வழக்கிற்காக கொடுக்கின்றேன் என்றாலும் சரி அல்ல. நான் எதிரியை கைது செய்த பிறகு அந்த கடையில் இருந்து ஆவணங்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. புகார்தாரரின் கடையின் முன்பு ரோட்டில் வைத்து நான் எதிரியை கைது செய்தேன். உண்மையிலேயே நான் அந்த இடத்தில் வைத்து எதிரியை கைது செய்து இருந்தால் அந்த கடையில் உள்ள ஆவணங்களை நான் கைப்பற்றி இருப்பேன் என்றாலும் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்திற்கான நேரம் மற்றும் தேதி ஆகியவை இந்த வழக்கிற்கென குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரி அல்ல. இந்த வழக்கில் எதிரி கூடுதல் தொகையை வட்டியாக பெற்றார் என்பதை காண்பிக்கும் எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே கொஞ்சம் காவல் நிலையத்தில் இது மாதிரியான புகாரை கொடுத்துள்ளார் என்றாலும் உண்மையிலேயே இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் நடைபெற்றிருந்தால் அந்த வழக்கிலேயே இந்த சம்பவம் குறித்து புகார் குறிப்பிட்டு இருப்பார் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ

இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடங்களை தயார் செய்யவில்லை என்றாலும் புகார் தாரர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரி அல்ல.

5)இந்த வழக்கிற்கான சாட்சிகளை எந்த இடத்தில், எந்த தேதியில் வைத்து விசாரணை செய்தேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். கிருஷ்ணா ஸ்பேர் பார்ட்ஸ் கடையை புகார்தாரரும் எதிரியும் பங்குதாரராக தான் நடத்தினார்கள் என்ற விவரத்தை யாரேனும் என்னிடம் கூறினார்களா என்றால் கூறினார்கள். எந்த சாட்சி அதை கூறினார்கள் என்று அவர்களது சாட்சியத்தில் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அந்த விவரம் புகாரியிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. புகாரில் எந்த இடத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் சாட்சிகள் சொன்னதை நான் அவர்களது வாக்குமூலத்தில் சரியாக பதிவு செய்யாமலும் புகார்தாரருக்கு ஆதரவாக இந்த பதிவுகளை பதிவு செய்யாமல் இந்த வழக்கை தொடர்ந்து உள்ளேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் மேல் அதிகாரியிடம் வழக்கு கோப்பை குற்ற விசாரணைக்காக ஒப்படைத்தேன் என்ற விபரம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

Live Law